மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) தேவக்கோட்டை அரசினர் மருத்துவமனை மருத்துவ அதிகாரி டாக்டர் இராசலட்சுமி மீது கூறப்பட்ட புகார் குறித்து இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரி விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கையொன்றினை அளித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவமனையிலே பணி புரியும் மருத்துவ அதிகாரிகள் 3 ஆண்டு களுக்குமேல் தொடர்ச்சியாக இருந்திருக்கிறார்கள். 3 ஆண்டு களுக்கு மேல் வேலை செய்யக்கூடியவர்களை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இதிலே அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராசலட்சுமி என்பவர் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள்முதல் தேவக்கோட்டை அரசினர் மருத்துவ மனையில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இப்போது 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாளன்று அந்த இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப் பட்டு இருக்கிறார்.

பெரணமல்லூர் தொகுதியில் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 719—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதியில் ஒன்றியத்தின் பொது பண்டில் இருந்து மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

இல்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சியிலே எந்தவிதமான நிதி வசதியும் இல்லாத காரணத்தாலும் அங்கே 15 ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்ற காரணத்தினாலும் உடனடியாக இனியாவது மருத்துவ மனையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, விடை இல்லை என்று தான் சொன்னேன். இப்போதும் அதையே தான் சொல்ல வேண்டும்.

1981 ஏப்ரல் 9]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள் இல்லாத இடங்களிலே ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களாகவே முன்வந்து நிலத்தை இனாமாகக் கொடுத்து மருந்துகளைக் கொடுத்தால் டாக்டர்களை அரசு நியமிக்கும் என்ற விதி இருக்கிறதே, அந்த விதி அடிப்படையிலேயாவது ஊராட்சி ஒன்றியங்களில் அப்படி முன்வருகிற இடங்களிலே மருத்துவ அதிகாரிகளை அரசு செலவில் நியமிக்க அரசு முன்வந்து அப்படிப்பட்ட மருத்துவ மனைகளைத் தொடங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த நிலைமைகளுக்கேற்ப அந்த நிலைமைகளை ஆராய்ந்து, பின்னர் முடிவெடுத்துக் கொள்கிறோம். We take decision on the merits of individual cases.

கலவை, விஷாரம் பேரூராட்சிகளிலுள்ள அரசு மருத்துவமனைகள்.

*வினா எண் 720—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியில் உள்ள கலவை, விஷாரம் பேரூராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளை மக்கள் வசதிக்கு ஏற்ப விரிவுபடுத்தும் வகையில் மேலும் மருத்துவர்களை நியமிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கலவை பேரூராட்சி மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பதும், அதே சமயத்தில் விஷாரம் பேரூராட்சியில் ஆண் டாக்டர் இல்லை என்கிற காரணத்தினால், ஏழை எளிய மக்கள் அதிகம் பணம் செலவு செய்து தனிப்பட்ட டாக்டர்களிடத்திலே வைத்தியம் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், இந்த இரண்டு இடங்களிலும் பெண் டாக்டர் ஒருவரையும், ஆண் டாக்டர் ஒருவரையும் நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த முயற்சியை அரசு எடுக்கும். கலவையைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்த அந்த மருந்தகத்தை கவர்ன்மென்ட் டிஸ்பென்சரியாக மாற்றி, இப்போது 10 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே